பக்கங்கள்:-21

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 13 | வியாழக்கிழமை | 29.08.2024 | அதிர்வு 027 |
|---|---|---|---|---|---|

## கிளிநொச்சியில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்




சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நாளை கிளிநொச்சி மாவட்டத்தில் கவனவீர்ப்புப் 05



# தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் தேர்தல் முடிவோடு பாடம் படிப்பர்

## அடித்துக் கூறுகின்றார் வினோ எம்.பி

(கே.வசந்தன்)

பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினர்திருந்துவதற்கான ஒரு வாய்ப்பினை தேர்தல் முடிவுகள் நிச்சயம் உணர்த்தும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 05

# தமிழ்ப் பொது வேட்பாளர் ஒற்றுமைக்கு ஓர் ஆரம்பம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி புகழாரம்



தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் தமிழர்களின் ஒற்றுமைக்கு ஓர் ஆரம்பப் புள்ளியாகத் தான் நான் அதனைப் பார்க்கின்றேன் என தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண் மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் 05



வடக்கில் இப்போது பெரிதும் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள தரப்பு வைத்தியத்துறை. அதுவும் பெரிதும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருபவர்கள் மருத்துவர்கள் தான்.

மருத்துவர்கள் தொடர்பாக – அதுவும் வடக்கில் பணிபுரியும் வைத்தியர்கள் சம்பந்தமாக – அதிர்ச்சி தரும் ஒரு விவரம் வெளியாகியிருக்கின்றது.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட அறிக்கைகளின்படி, வடக்கில் பணிபுரியும் கணிசமான மருத்துவர்கள் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை சித்தி அடையாதவர்களாம்.

அப்படியானால் அவர்கள் எவ்வாறு டாக்டர்களானார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையில் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, மருத்துவப் படிப்புக்கு அனுமதி பெற்று, மருத்துவர்களாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியே வருவோர் தம் தாய் 05



# முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

”கொரோனா தொற்றின் போது மரணித்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்ய பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறலை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும். இலங்கை அரசாங்கம், ஜெருசலத்தில் புதிய கொன்சூலர் அலுவலகம் ஒன்றை திறந்திருப்பதாக பரவும் தகவல் உண்மைக்கு புறம்பானது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா நிறைவேற்றுக் குழுவுடன் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதி, அதன் தலைவர் அஷ்–ஷெய்க் எம். ஐ. எம். றிஸ்வி மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்–ஷேக் அக்ரம் நூராமித், பொருளாளர் அஷ்–ஷேக் ஏ. ஏ. அஹமட் அஸ்வர், உப தலைவர் அஷ்–ஷெய்க் எச். ஓமர்தீன், அஷ்–ஷெய்க் எம். ஜே. அப்துல் காலிக், உப தலைவர் அஷ்–ஷேக் ஐ. எல். எம். ஹாஷிம், உப தலைவர் அஷ்–ஷேக் ஏ. எல். எம். பலீல் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். இதன் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு மௌலவிமார் தமது ஆசிகளை தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மௌலவிமார்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணையை கோருவதற்காகவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார் எனவுன் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் மகா நாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டார் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதற்குத் தான் அர்ப்பணிப்புடன் இருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

பலஸ்தீன மோதல்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பலஸ்தீன நாடு தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும், அதற்காகத் தான் தொடர்ந்தும் குரல்கொடுக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம், ஜெருசலத்தில் புதிய கொன்சூலர் அலுவலகம் ஒன்றைத் திறந்திருப்பதாகப் பரவும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்றும், இஸ்ரேலுக்குள் பணியாற்றும் இலங்கையருக்கு சேவை வழங்குவதற்காக 2000 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேலுக்குள் தூதரக சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி எம்.பி, பைசர் முஸ்தபா, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







# மொட்டு ஆட்சியைக் கைப்பற்றினால் உறவினர்களுக்கே பதவிகள் பகிரப்படும்

## அநுர குமார திஸநாயக்க கூறுகின்றார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றினால் உறவினர்களுக்கே பதவிகள் பகிரப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஸ்தாபித்தால், தம்பியை ஜனாதிபதியாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார். அடுத்த தம்பி பஸில் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குகிறார்.

அண்ணனை அமைச்சராக்குகிறார். சமல் ராஜபக் ஷவின் புதல்வருக்கு அமைச்சுப் பதவியை வழங்குகிறார். ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவ்வாறு உறவினர்கள் இல்லை.

அதன் காரணமாக அவர், கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு ஆலோசகர் பதவிகளை வழங்கியுள்ளார்.

சாகல ரத்னாயக்க, அகில விராஜ் காரியவசம், ஆஷு மாரசிங்க, ருவன் விஜேவர்த்தன, ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு இந்த ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான காரணம் என்ன?

ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காமல் தங்களது வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன." – என்றார்.

# அநுரகுமாரவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணிலின் வேலைத்திட்டங்களே உள்ளடக்கம்

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

"தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களே காணப்படுகின்றன. ஒருசில சிறிய வித்தியாசத்துடனேயே அதனை வெளியிட்டுள்ளனர். அவர்களின் வாக்குறுதிகளை யதார்த்தமாக்குவது சாதாரண விடயமல்ல."

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

"தேசிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதிகமான திட்டங்கள் ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டங்களாகும். அந்த திட்டங்களில் ஒருசில விடயங்களை ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்திருக்கிறார்.

என்றாலும் ஒருசில மாற்றங்களை செய்துள்ளனர். அதேநேரம் அவர்களின் ஒருசில வாக்குறுதிகளை இந்த பூமியில் யதார்த்தமாக்குவது தற்போதைக்கு சாத்தியமில்லை.

அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்வி தொடர்பில் சில விடயங்களை குறிப்பிட்டுள்ளார்கள். 3 கிலோ மீட்டருக்கு ஒரு பாடசாலை அமைப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அன்று நான் கல்வி அமைச்சராக இருந்து செயற்படுத்திய அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட்டத்தையே இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதில் புதிய விடயம் ஒன்றும் இல்லை.

மேலும் கல்விக்கு 6 வீதம் ஒதுக்குவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனை செயற்படுத்த முடியும் என்றால் நல்லது. ஆனால் இந்த பணத்தை எவ்வாறு தேடிக்கொள்வது என்ற விடயங்கள் எதுவும் இல்லை. அதனை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை.

அதனைவிட பாரிய பிரச்சினைகள் இந்த நாட்டில் இருக்கின்றன. அவர்களிடம் முறையான முகாமைத்துவ



நடவடிக்கை இருப்பதையும் காணக்கூடியதாக இல்லை. பணம் தேடிக்கொள்ளவதற்கான முறை ஒன்றும் அவர்களிடம் காணக்கூடியதாக இல்லை.

அழகான நகைச்சுவைக் கதைகளைச் சொல்ல முடியும். வாக்குறுதிகளை வழங்க முடியும். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவது சாதாரண விடயமல்ல.

ரணில் விக்கிரமசிங்க அன்று கல்வி அமைச்சர் என்றவகையில் அவருக்கு கல்விக்கொள்கைத் திட்டத்தை செயற்படுத்த இடமளிக்க வில்லை. அவற்றை செயற்படுத்த அன்று இடமளித்திருந்தால், இன்று எமது நாடு வளங்கள் நிறைந்த தேசமாக இருந்திருக்கும்.

அதனை தடுத்தவர்கள் யார் என்பது இந்த நாட்டு மக்களுக்கு தெரியும். அதனால் அனுபவத்துடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும். எமது நாடடில் அரசியல் பிரச்சினை இல்லை.பொருளாதாரப் பிரச்சினையே இருக்கிறது.

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே முடியும். அனுபவமில்லாதவர்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் நாடுக்கு என்ன நடக்கும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்."– என்றார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், குறித்தொதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அரசியல் கட்சி / வேறு கட்சியின் பெயர் உள்ளிட்ட விடயங்களுடனான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அதிவிசேட வர்த்தமானி தேர்தல்கள் ஆணைக் குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டை – கல்வி போதித்த மண்ணை – துறந்து வெளிநாடுகளுக்கு ஓடி விடுகின்றனர்.

அதனால் மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு. பற்றாக்குறை. வெளிநாட்டில் மருத்துவக் கல்வி பயின்று மருத்துவர்களாக சித்தி பெற்றோரை நமது வைத்தியசாலைகளில் பணிக்கு அமர்த்த வேண்டிய கட்டாயம்.

அவர்கள் எந்த நாட்டில் மருத்துவக் கல்வி பயின்றார்களோ அந்த பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான பரீட்சைப் பெறுபேறுகளைத்தான் பெற்றிருப்பார். இலங்கையின் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இல்லை.

இதுகுறித்து உயர்கல்வி அமைச்சர் சுரேன் ராகவன் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

“ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடையாதவர்கள் வடக்கு மாகாணத்தில் மருத்துவர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

“வவுனியா, மன்னார் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், வெளிநாடுகளில் பட்டம் பெற்றவர்கள். அவர்கள் இலங்கையில் உயர்தர கல்வியில் சித்தியடையவில்லை.

“வைத்தியர் ஒருவர் இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவருக்கு அனுமதி கிடைத்திருக்க வேண்டும். அவர் எங்கு படித்தார் என்பது எமக்கு கவலையில்லை. அவர் படித்த மருத்துவக் கல்லூரி சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

“உயர்தரம் இருந்ததோ, இல்லையோ என்பது இங்கே கேள்வியல்ல. இவர்கள் தரமான கல்வி கற்றார்களா என்பதே முக்கியம். உயர்தரம் என்பது எமது நாட்டில் ஒருவரின் வாழக்கையைத் திசை திருப்பும் ஒரு திருப்பு முனையாக காணப்படுகிறது.

“உயர்தரத்தில் 3 ஏ சித்தி பெற்றுள்ள கொழும்பு மாவட்ட பிள்ளைகள் பலர் மருத்துவம் படிக்க இயலாமல் காணப்படுகின்றனர்.

“அவர்களுக்கு நாம் என்ன சொல்லப்போகின்றோம்?” –என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பலமருத்துவசர்ச்சைகளுக்குஇப்போது காரணம் விளங்குவது போன்று தோன்றுகின்றது அல்லவா...?

# கிளப் வசந்த படுகொலை; மேலும் இரண்டு பேர் கைது

கிளப் வசந்த என்ற சுரேந்திர வசந்த பெரேரா கொலையுடன் தொடர்புடைய 2 ஆவது துப்பாக்கிதாரி மற்றும் கார் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பின்வத்தையில் வைத்து பாணந்துறை பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை 8ஆம் திகதி, அதுருகிரிய பொலிஸ் பிரிவில் உள்ள பச்சை குத்தும் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் 4 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

## தமிழ்ப் பொது வேட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்து தெரிவித்த அவர் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடானது பேரம் பேசி, ஒப்பந்தங்களை மேற்கொண்டு அதன் மூலமாக தமிழர்களுக்கு ஒரு தீர்வை நோக்கி செல்ல முடியாது என்பதுதான்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ள இந்த நேரத்திலே நாங்கள் போய் ஒரு சிங்களத் தலைவருடன் பேசுவது உகந்ததல்ல என்பதும் எனது நிலைப்பாடு.

இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழர்களின் ஒற்றுமைக்கு ஓர் ஆரம்பப் புள்ளியாகத்தான் நான் பார்க்கின்றேன்.

மூன்று சிங்கள தலைவர்கள் தற்போது மிக நெருக்கமான போட்டியில் இருக்கின்றார்கள்.

யார் வந்தாலும் ஈழத் தமிழர்களுக்கான அரசியலை நோக்கி நாம் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கத்தான் வேண்டும்.

கடந்த மூன்று தடவைகளாக இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தும் அவர்களது தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண முடியவில்லை. நாங்கள் தற்போது தமிழர்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்காக உருவாக்கப்பட்டது எமது கட்சி. தமிழர்களது இனப் பிரச்சினை தீர்வுக்கு அனைவரும் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும்.– என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தம் போராட்டம் கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றிலிலே ஆரம்பமாகவுள்ளது.

இந்த போராட்டத்திற்கு எட்டு மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டசங்கத்தின் தலைவி கனகரஞ்சி மற்றும் செயலாளர் லீலாதேவி ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டங்களை புலம்பெயர் தேசங்களிலும் நடத்தி வலுச்சேர்த்து அழுத்தம் கொடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பொதுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:–

முன்னர் நான் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. எனது கட்சியாகிய ரெலோ வேறு ஒரு முடிவு எடுத்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரை எடுத்த முடிவில் மாற்றம் இல்லை. பொதுவேட்பாளருக்கு ஆதரவாக நான் பிரசாரம் செய்யப்போவதில்லை. அவருக்கு ஆதரவில்லாத நிலைப்பாடு அங்கத்துவக் கட்சி உறுப்பினர்களிடத்திலும் உள்ளது. எமது கட்சி உறுப்பினர்களிடத்திலும் இருக்கிறது.

கட்சி எடுத்த முடிவு சரியோ, தவறோ என்பதற்கு அப்பால் தனிப்பட்ட ரீதியிலே இந்த முடிவோடு நான் இணங்கவில்லை. மக்களால் விரும்பம்படுகின்ற – மக்கள் தேர்தெடுத்த முடிவாக – இதனை நான் கருதவில்லை. தேர்தல் முடிவுகளிற்கு பின்னர் இந்த பொதுக்கட்டமைப்பில் உள்ளவர்கள் திருந்துவதற்கான ஒரு வாய்ப்பை இந்த தேர்தல் நிச்சயமாக கொடுக்கும்.

குறிப்பாக தேர்தலில் நிற்கும் மூன்று வேட்பாளர்களின் பெயர்கள் மக்கள் மனங்களிலே இருக்கின்றன. மக்கள் தீர்க்கமான, சரியான முடிவை எடுப்பார்கள். பெரும்பான்மையான மக்கள் எடுத்த முடிவிற்கு ஆதரவாக நானும் செயற்படுவேன்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் பல தடவைகளுக்கு மேல் சந்தித்திருக்கின்றேன். வன்னி மாவட்டத்தினுடைய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கங்கள் சம்பந்தமாக அவருடன் கலந்துரையாடியுள்ளேன். – என்றார்.






# திரும்பவும் சேவைக்கு வருகிறது ‘வடதாரகை’

(ந.லோகதயாளன்)

“வடதாரகை“ பயணிகள் படகின் திருத்தத்திற்காக 5 கோடி ரூபா பணம் வழங்கப்பட்டு 6 மாதங்களின் பின்பு அது சேவைக்கு வருவதாக மாவட்டச் செயலகத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு இடையில் பயணிகள் போக்கு வரத்துச் சேவைக்காக 2017 ஆம் ஆண்டு மாகாண சபைக்காக நெல்சிப் திட்டத்தின் கீழ் 15 கோடி ரூபா செலவில் இது கொள்வனவு செய்யப்பட்டது.

சேவையில் ஈடுபட்டிருந்த அந்தப் படகு 2023 ஆம் ஆண்டு ஏறபட்ட பழுதை சீர் செய்யவே கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வட தாரகை திருத்தத்திற்காக திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. படகிற்கான திருத்தத்திற்குரிய 5 கோடியே 14 லடசத்து 81 ஆயிரத்து 80 ரூபா பணம் கடற்படையினரின் கணக்கில் 2024-02-20 ஆம் திகதிய காசோலை மூலம் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட பணத்தில் இருந்து திருத்தச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு படகு மீண்டும் சேவைக்குத் திரும்புகின்றது.

இந்தப் படகின் திருத்தப் பணிகள் முடிவுற்றதனையும் படகு சேவைக்கு திரும்புவதையும் நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

இதேநேரம் மாகாண சபைநின் பெருந்தொகை பணம் செலவு செய்யப்பட்ட படகு உடனடியாக மத்திய அரசின் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

# நாட்டைக் குழப்பி ஜனாதிபதி பதவியில் தொடர ரணில் விக்கிரமசிங்க சூழ்ச்சி!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



“நாட்டில் குழப்பம் ஒன்றை ஏற்படுத்தி தொடர்ந்தும் ஜனாதிபதியாகவே இருப்பதற்கான சூழ்ச்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகின்றார்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”நாட்டில் 9 ஆம் திகதி இரத்தக் களரியை சுவைத்தவர்கள் ஆட்சியைப் பிடிக்க முயன்று வருகின்றனர். தேர்தல் முடிவு வெளிவருவதற்கு முன்னதாகவே அவர்கள் இரத்தக் களரியை சுவைப்பதற்கு தயாராகி வருகின்றனர்.

தற்போது ரணில் தேர்தல் வெற்றிக்காக பல முயற்சிகளை மேற்கொள்கிறார். இதற்காக அவர் எடுக்கின்ற நடவடிக்கைகளால் சஜித்தே பாதிக்கப்படுகிறார்.

அதனால். ரணிலுக்கும் நன்மை இல்லை. மூன்றாம் தரப்பு ஒன்றே நன்மையைப் பெற்றுக் கொள்ளப் போகிறது.

அந்த மூன்றாம் தரப்பானது, ஏற்கனவே பல ஒன்பதாம் திகதிகளில் இரத்தத்தை சுவைத்த அணியினர்தான்.

அவர்கள் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போது, தேர்தல் முடிவை வெளியிடாமல், தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பதவியில் நீடிப்பதற்கான சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.”– என்றார்.




# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணையம் கலந்துரையாடல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில் ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக் காலை கூடியது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க –

”நீதிமன்ற தீர்ப்பால், அடுத்ததாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த செயற்பட வேண்டும். மற்ற தேர்தல்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் எப்படி செய்வது என்று இன்று ஆலோசித்தோம். இன்னும் திகதி கலந்துரையாடப்படவில்லை” என்றார்.

இதே நேரம் நேற்றைய கலந்துரையாடல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் விளக்க அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டிருந்தார்.

# ஆஸியில் புகலிடம் கோரிய தமிழ் இளைஞர் தனக்குத் தானே தீமூட்டி உயிரை மாய்த்தார்



புகலிடம் கோரி ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் மெல்போர்னில் தீயிட்டு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

23 வயதான இவர் கடந்த 2013ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக குடியேறியவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக பெற்றோருடன் சென்றுள்ளார்.

தற்காலிக விசாவில் சுமார் 11 வருடங்களாக அந்த நாட்டில் தங்கியிருந்த அவர், முன்னதாகப் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

மனோ யோகலிங்கம் என்ற இளைஞன் விசா பிரச்சினை காரணமாக மிகவும் கவலையடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் (செவ்வாய்கிழமை) இரவு அவர் தனக்கு தானே தீவைத்து கொண்டார் எனவும், பின்னர் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் விக்டோரியா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அவர் நேற்றய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலிய மத்திய அரசின் ”அகதிகள் தொடர்பாக அறிமுகப்படுத்திய கொள்கைக்கு” எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுபான்மையினரின் மீது வந்துள்ள திடீர் கரிசனை

வழமைக்கு மாறாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மூன்று, நான்கு முனைப் போட்டியாக கட்டவிழ்கின்றது.

சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளையும் வளைத்துப் பிடித்தால்தான் வெற்றி வாய்ப்பு சாத்தியமாகும் என்ற இக்கட்டு பிரதான வேட்பாளர்களுக்கு.

பெரும்பான்மை இனத்தவரை பகைத்துக் கொள்ளாமல், சிறுபான்மையினரின் ஆதரவை வளைத்துப் பிடிப்பது என்பது அரசியல் நெருக்கடி மிக்க விடயம். கயிற்றில் நடப்பது போன்றது.

இந்த விவகாரத்தில் அநுரகுமார திஸநாயக்காவின் தேசிய மக்கள் சக்தி ஒரு தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிகின்றது

தமக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் கணிசமான அளவு கிட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்துள்ள அந்தத் தரப்பினர், கிட்டுவதற்கு வாய்ப்புக் குறைந்த சிறுபான்மையினரின் வாக்குகளை கவரும் முயற்சியில், தமக்கு உறுதிப்படுத்தப்பட்ட பெரும்பான்மையினரின் வாக்குகளைக் குழப்பி விடக் கூடாது என்பதில் தெளிவாகவும் கவனமாகவும் இருக்கின்றார்கள்.

யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் புரிந்தவர்கள் எனக் குற்றம் சுமத்தப்படும் படையினரைத் தண்டிக்கும் நடவடிக்கையில் தமது அரசு இறங்காது என்று அநுரகுமார திஸநாயக்கா வெளிப்படையாகக் கூறி இருப்பது கையில் இருக்கும் சிங்கள பௌத்தர்களின் உறுதியான வாக்குகளை சிதறடித்து விடக் கூடாது என்ற இலக்குக் கருதித்தான் என்பது தெளிவானது.

மற்றொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களை இலக்கு வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தமது பிரசாரகர்களை முன்னெடுத்து இருக்கின்றனர்.

இரண்டு வருடங்களாக அதிகாரத்தில் நீடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம்களுக்கு எதிராகப் பேரினவாதத்தினால் கொடூரமாக அரங்கேற்றப்பட்ட - கொரோனாத் தொற்றில் மரணம் அடைந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வல்வந்தமாக எரித்த - குரூரச் செயல் குறித்து இதுவரை வாய்மூடி மௌனித்திருந்து விட்டு, இப்போது அந்த விடயம் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்கப்படும் என்று கயிறு விடுகின்றார்.

அதுவும் நேற்று முன்தினம் கிழக்கில், அக்கரைப்பற்றில் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்படி கொவிட் காலக் கொடூர நடவடிக்கைக்குக் காரணமானவர்கள் - அந்த நடவடிக்கைக்குத் தவறாக தூண்டியவர்கள் - மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இது விடயத்தில் பாதிப்புற்றோருக்கு உயர்ந்த நஷ்ட ஈடு வழங்கப்படும் எனவும் அறிவித்தமையை அடுத்து, அதே விடயத்தை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும் எனத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கின்றார்.

சிறுபான்மையினரான முஸ்லிம்களின் வாக்குகளை வளைத்துப் பிடிப்பதற்குத்தான் முஸ்லிம்கள் மீதான வேட்பாளர்களின் அதீத கரிசினை இப்போது பீறிட்டு வெளிப்படுகின்றது என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மை.

தமிழர்களின் வாக்குகளை வளைத்துப் பிடிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் முன்வைக்கும் பொறிகள் பற்றிய மேலதிக விவரங்கள் இன்று அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகும் போது அவற்றில் வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.




# விஜய்யின் மாநாடு திகதி அறிவிப்பு

நடிகர் விஜய்யின், தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு குறித்த தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளது.

கடந்த வாரம் தன்னுடைய கட்சி கொடி மற்றும் பாடலை வெளியிட்ட விஜய், தற்போது த.வெ.க கட்சியின் முதல் மாநாட்டை நடத்த முடிவு செய்துள்ளார்.

அதன்படி விழுப்புரம் மாவட்டம் விக்ரவாண்டியில் செப்டம்பர் 23 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழக கட்சியின் முதல் மாநாடு நடைபெற உள்ளதாகவும், விஜய்யின் உத்தரவின் பேரில் மாநாட்டுக்கு அனுமதி கோரி த.வெ.க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அனுமதி கோரி மனு அளித்துள்ளார்.

இது குறித்த தகவல் தற்போது உறுதியாகி உள்ளது.மாநாட்டுக்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில்,மாநாட்டின் பணிகள் கூடிய விரைவில் ஆரம்பமாக உள்ளன.

மேலும், இந்த மாநாட்டில் சுமார் பத்து இலட்சம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தன்னுடைய முதல் மாநாட்டையே மிகப் பிரமாண்டமாக விஜய் நடத்த திட்டமிட்டுள்ளார் .

இந்நிலையில், த.வெ.க கொடியில் யானை உருவம் இருப்பதற்கு எதிராக பகுஜன் சமாஜ் கட்சியினால் முன்வைக்கப்பட்ட புகார் தொடர்பாக தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் கட்சி பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் சட்டநிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார்.இதையடுத்து டுக்கப்பட்ட முடிவில், பகுஜன் சமாஜ் கட்சி புகாருக்கு தேர்தல் கமிஷனிடம் இருந்து விளக்கம் கேட்டு முறைப்படி கடிதம் வந்தால் அதற்கு தகுந்த விளக்கம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



# இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் 11,700 கோழிகள் அழிக்கப்பட்டன

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் பறவைக்காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய ஒடிசாவின் பிபிலி பகுதியில் பறவைக் காய்ச்சலைத் தடுக்கும் விதமாகக் கோழிப்பண்ணைகளில் உள்ள கோழிகளை அழிக்கும் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது சுமார் 11,700 கோழிகள் கொல்லப்பட்டன என இந்திய சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ‘பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு 10 நாள்களில் தூக்கு,அடுத்த வாரம் சட்டம்’

## மம்தா பானர்ஜி அறிவிப்பு



பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு 10 நாள்களில் தூக்கு தண்டனை விதிக்கும் சட்டம் அடுத்த வாரம் மேற்கு வங்க சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் என அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

ஆனால், தங்கள் அரசு நிறைவேற்றி அனுப்பும் இந்த மசோதாவுக்கு ஆளுநர் அனுமதி தர மாட்டார் என்பது தனக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாணவர் அணி நிறுவன தினத்தை முன்னிட்டு கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய மம்தா பானர்ஜி,

“மேற்கு வங்க சட்டப்பேரவை அடுத்த வாரம் கூட்டப்படும். அப்போது, பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு 10 நாள்களுக்குள் மரண தண்டனையை உறுதி செய்வதற்கான மசோதாவை நிறைவேற்றுவோம்.

இந்த மசோதாவை ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படும். அந்த மசோதாவுக்கு அவர் ஒப்புதல் தரவில்லை என்றால், நாங்கள் ராஜ்பவன் வெளியே உட்காருவோம். இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், பொறுப்புக் கூறுவதை இந்த முறை ஆளுநர் தவிர்க்க முடியாது” என்று தெரிவித்தார்.





# போர் நிறுத்த திட்டத்தை முன்வைக்கும் உக்ரைன்

ரஷ்யாவுடனான போர் இறுதியில் பேச்சுவார்த்தையிலேயே முடிவடையும், ஆனால் இதன் போது, கெய்வ் ஒரு வலுவான நிலையில் இருக்க வேண்டும் என்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் கெய்வின் மூன்று வார கால ஊடுருவல் அந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம், தமது போர் நிறுத்த திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகவும் என்றும் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவை கட்டாயப்படுத்துவதாகும் என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனநாயகக் கட்சியின் துணைத் தலைவர் கமலா ஹாரிஸ்/டனும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்புடனும் தமது திட்டத்தைப் பற்றி விவாதிக்கவுள்ளதாக உக்ரைனின் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

செப்டம்பரில் நியூயார்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் கலந்து கொள்ள அமெரிக்கா செல்ல இருப்பதாகவும், அதன்போது, பைடனைச் சந்திக்கத் தயாராகி வருவதாகவும் செலென்ஸ்கி கூறியுள்ளார்.

இதற்கிடையில், கடந்த வாரம் கெய்வ் சென்றிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நேற்று செவ்வாயன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் உரையாடினார், உக்ரைன் மோதலுக்கு விரைவான மற்றும் அமைதியான தீர்வை ஆதரிப்பதாக அவரிடம், மோடி கூறியுள்ளார்.

எனினும் இதன்போது புட்டின் வழங்கிய பதில் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.



# ஷன்ஷான் புயல் குறித்து ஜப்பானுக்கு எச்சரிக்கை

ஷன்ஷான் புயல் குறித்து ஜப்பானுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புயல் தற்போது ஜப்பானின் அமாமி ஓஷிமா தீவுக்கு அருகில் கடல் வழியாக நகர்வதாகவும், அது இவ்வார இறுதியில் மிகவும் வலுவான புயலாக உருவாகலாம் எனவும் ஜப்பான் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கியூஷு மற்றும் அமாமி ஆகிய பகுதிகளில் மணிக்கு 162 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது



# யாழ் பஸ் நிலையம், முற்றவெளி, கோட்டையில் சட்டவிரோதச் செயற்பாடுகள் என முறைப்பாடு!

## நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது. குடிதண்ணீர்ப் பிரச்சினை, வீதி சீரின்மை, காணிப் பிணக்குகள், போக்குவரத்துச் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

யாழ் மத்திய பஸ் நிலையத்திலும்,



முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளிலும் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனப் பொதுமக்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, யாழ் மத்திய பஸ் நிலையத்தில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு, ஆளுநர் அவர்கள் பணிப்புரை விடுத்தார். அத்துடன் பஸ் நிலையத்தில் 24 மணித்தியாலமும் பொலிஸ் காவலரண் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார்.

மேலும் முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் இடம் பெறுகின்றன எனக் கூறப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க, சிறந்த பொறிமுறை ஒன்றை திட்டமிட்டு துரித நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 826 திட்டங்களை செயல்படுத்த இந்த வருடம் 322 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 734 திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மிக நீண்ட காலத்தின் பின்னர் திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியை உரியவாறு பயன்படுத்த வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் தெளிவுப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி பஸ் நிலையக் கடைகளை தேர்தல் சமயம் வழங்க அனுமதியாதீர்!

## தெரிவத்தாட்சி அலுவலரிடம் சிறிதரன் எம்.பி. முறையீடு

(ந.லோகதயாளன்)

தேர்தல் காலத்தில் கிளிநொச்சி பொது பஸ் நிலையத்தில் கடைகள் வழங்குவதை உடன் தடுத்து நிறுத்துமாறு தேர்தல் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முறையிட்டுள்ளார்.

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் தேர்தல் காலத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக கடைகளைப் பெற சிலர் முயலும் சமயம், தனது கட்சி ஆதரவாளர்களுக்கு கடைகளை வழங்க அமைச்சர்



டக்ளஸ் தேவானந்தா முயல் கின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை பகிரங்கமாக ஆதரிக்கும் நிலையில் இதனை வழங்கி ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு திரட்ட முயல்வதனால் இவ்வாறு இடம்பெறும் முயற்சியை உடன் தடுத்து நிறுத்துமாறு கோரியே கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முறையிட்டுள்ளார்.



# வவுனியாவில் விபத்தை ஏற்படுத்தி விட்டுத் தப்பி ஓடிய காரை விரட்டிப் பிடித்துச் சாரதியை நையப்புடைத்த இளைஞர்கள்!

(கே.வசந்தன்)

வவுனியா நகரில் ஆபத்தான வகையில் காரைச் செலுத்தி தொடர்ச்சியான விபத்துக்களை ஏற்படுத்திய கார் சாரதி இளைஞர்களால் விரட்டிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து காரை செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் உக்கிளாங்குளம் பகுதியில் விபத்து ஒன்றை ஏற்படுத்திவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார். இதன் போது வைரவபுளியங்குளம் மற்றும் நகரப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த ஏனைய வாகனங்களுடனும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து அந்தஜ் காரை இளைஞர்கள் சிலர் விரட்டிச் சென்றுள்ளனர். அதிவேகமாக பயணித்த கார் பூந்தோட்டம், பெரியார்குளம் பகுதியில் வீதியின் கரையில் இருந்த மின்சார கம்பத்துடன் மோதி நின்றது.

காரின் சாரதியை மடக்கிப் பிடித்த இளைஞர்கள், அவரை நையப்புடைத்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் சொல்லும் தலைவர் அல்லர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

”நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒளிமயமான நாளை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் இந்த கடினமான பொருளாதார பாதையில் இன்னும் கொஞ்சம் தூரத்திற்குச் செல்ல வேண்டும்.”

- இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

“எமது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்தார். இருவருமே கதைப்பதில் வல்லவர்கள். எனவே இந்த சவாலை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் யோசித்து அந்த சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் அவர் ஜனாதிபதி வேட்பாளராக இந்த விவாதத்திற்கு வருவாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஒவ்வொரு முச்சந்தியிலும் நடைபாதையிலும் உண்மை விளம்பியபடி இருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவிடமிருந்து இன்னும் எந்த சலனமும் இல்லை. நமக்குத் தெரிந்த பழைய ஜே.வி.பி ஆள்கள் இப்படி இல்லை. ஒரு சவால் வரும்போது ஓடி வந்து அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இப்போதைய ஜே.வி.பி. ஆள்களுக்கு அவ்வளவு துணிச்சலான முதுகெலும்பு இல்லை, அவர்களால் தற்பெருமை காட்டத்தான் முடியும்.

சஜித், அநுர போன்றவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும்போது சாமானிய மக்களுக்கு சாப்பிடக் கூட நேரமில்லாமல் போகும். அவை இவ்வுலகில் நடைமுறைப்படுத்தக் கூடிய கொள்கைகள் அல்ல. அநுரவும் சஜித்தும் பழைய ஆள்கள்.

அதனால்தான் அநுரவின் அரசாங்கத்தின் நிதியமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி எலோன் மாஸ்க்கை போன்ற பொருளாதாரக் கொலையாளி என அழைக்கப்படுகிறார். உலகமே தெரியாத இந்த மாதிரி ஆள்களை வைத்து எப்படி நாட்டை கட்டியெழுப்ப முடியும்? ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது எப்படி?

உலகம் இப்போது நவீனமயமாக உள்ளது, எனவே பழைய உலகத்திற்கு ஏற்றவாறு திட்டங்களை உருவாக்குவது பயனற்றது. எந்நேரமும் பொய் சொல்லி மக்களை ஏமாற்றலாம் என எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. இம்முறை தேர்தல் முடிவுகளில் அவர்கள் எவ்வளவு பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை பார்க்க முடியும்.

ஜே.வி.பியினால் 88 - 89 காலப் பகுதியில் பஸ்கள் எரிக்கப்பட்டன, மின்மாற்றிகள் எரிக்கப்பட்டன, வங்கிகள் உடைக்கப்பட்டு அரசாங்க சொத்துக்கள் அழிக்கப்பட்டன. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய பணத்தில் அவற்றை மீளக் கட்டியெழுப்ப செலவு செய்ய வேண்டியிருந்தது. எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியில் ஜே.வி.பி.யும் பங்கு வகிக்கிறது. 75 ஆண்டுகால சாபம் பற்றி பேசும் ஜே.வி.பி, அது ஏற்படுத்திய பொருளாதார அழிவு பற்றி பேசவே இல்லை. எது சரி, எது தவறு என்பதை எதிர்த்து நிற்க உங்களுக்கு வலுவான முதுகெலும்பு இருக்க வேண்டும். ஜே.வி.பிக்கோ அல்லது சஜித்துக்கோ அத்தகைய முதுகெலும்பு இல்லை என்றார்.




# வவுனியா குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் முன்பாக 5 நாள்களாகத் தெருவில் நிற்கும் மக்களால் குழப்பநிலை

## நேற்று பொலிஸார் குவிப்பு; நிலைமையைத் தெளிவுபடுத்திய அதிகாரிகள்

(கே.வசந்தன்)

வவுனியா, மன்னார் பிரதான வீதியில் அமைந்துள் பிராந்திய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் முன்பாக நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலைமையை அடுத்துப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் சாதாரண சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஒருநாள் சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஏற்கனவே சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலம் முடிவடைந்தும் கடவுச்சீட்டினை பெறாதவர்கள் 10 நபர்கள் என ஒரு நாளைக்கு 60 நபர்களுக்கு கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை பெறுபவர்களில் முக்கிய தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையிலும் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுகின்றன.

இந்நிலையில், வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக கடந்த ஐந்து நாள்களாக வரிசையில் நின்றும் தமக்கும் இது வரை கடவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்துக் களேபரம் பண்ண முற்பட்டமையால் குழப்ப நிலைமை ஏற்பட்டது. அதனையடுத்து வவுனியா பொலிஸார் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டு அவ்விடத்தில் நிலவிய அசாதாரண நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததனர். குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளை திணைக்கள வாயில் முன்பாக வரவழைத்து வரிசையில் நின்ற மக்களுக்கு தற்போதைய நிலைமை தொடர்பில் தெளிவூட்டல் வழங்கப்பட்டமையினையடுத்து சுமுக நிலை கொண்டு வரப்பட்டது.

மேலும், கடவுச்சீட்டினை நாளையதினம் பெறுவதற்காக மக்கள் தொடர்ச்சியாக வரிசையில் காத்திருக்கின்றனர். சாதாரண சேவையின் கீழ் மார்ச் மாதம் விண்ணப்பித்து கடவுச்சீட்டு பெறாதவர்கள், வெளிநாட்டியிலிருந்து வருகை தந்தவர்கள், மீண்டும் வெளிநாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு கலாவதியானவர்கள், மாணவர்கள், சகோதரங்கனில் திருமணத்திற்கு செல்லவுள்ளவர்கள், வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பு ஆவணம் கிடைத்தும் கடவுச்சீட்டு இல்லாதவர்கள் எனப் பலரும் இவ் வரிசையில் காத்திருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# இறப்பர் செய்கையாளர்களுக்கு உரமானியம் வழங்க நடவடிக்கை

இறப்பர் செய்கையாளர்களுக்கு உர மானியம் வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இறப்பர் செய்கைக்காக பயன்படுத்தப் படும் 50 கிலோ கிராம் உரப் பொதியின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச உர நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவிற்கு பணிப்புரை விடுத்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

அதற்கிணங்க, 50 கிலோ கிராம் உரப் பொதியின் விலையை 9,500 ரூபாவிலிருந்து 5,500 ரூபா வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

# தேர்தல் பரபரப்பில் ஜெனிவாவை மறந்து விட வேண்டாம் தமிழ்த் தேசியத் தரப்பினருக்கு நினைவூட்டுகிறது ரெலோ

## ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவர்களுடனும் அக்கட்சியினர் சந்திப்பு

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புக்களில் தமிழ் மக்களின் பிரதான விடயமான ஜெனிவாவில் ஐ.நா. அமர்வுகளைப் புறந்தள்ளி விட வேண்டாம் என ரெலோ கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பேச்சாளர் கு.சுரேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 57 ஆவது அமர்வு நடைபெற இருக்கும் இவ்வேளையில் ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர் பான அறிக்கை மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது தரப்பில் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையின் மாதிரி வடிவம் அனைத்து கட்சி தலைவர்களுக்கும் பல நாள்களுக்கு முன்னரே எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் உயர்ஸ்தானிகராலய அலுவலர்களுடன் நடைபெற்ற சந்திப் பில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.,கட்சியின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் மற்றும் பிரான்ஸிலிருந்து ஏற்பாட்டாளர் மகேந்திரன் குலராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மற்றக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள முடிய வில்லை.

இருப்பினும் சந்திப்பில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட கலந்து கொண்டவர்கள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களின்



தற்போதைய நிலை, தொடர்ந்தும் மீறப்பட்டு வரும் மனித உரிமை விடயங்கள் பற்றி விரிவாக எடுத்து ரைத்தனர்.

மனித உரிமைப் பேரவைக்கு சமர்பிக்கத் தயாராகி இருந்த ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அறிக்கையும் அதில் கலந்துரையாடப் பட்டிருந்தது.

எதிர்வரும் மனித உரிமைப் பேர வையின் அமர்வுக்கு முன்னராக எமது தரப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

நல்லிணக்கம் மற்றும் பொறப்புக் கூறல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மெத்தனப் போக்கும் அதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்சனைக ளையும் சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். அதில் பொது வேட் பாளரும் ஒரு பொறிமுறையாக கையாளப்படுகிறது.

இந்த நேரத்தில் மனித உரிமை பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல் வதற்கான மிகப் பிரதான தளமாக அமைந்திருக்கிறது. சர்வதேச நாடுகள் பொறுப்புக் கூறல் மற்றுமை நல்லி ணக்கம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரை ஜனா திபதி தேர்தல் விடயங்களினால் நாம் மறந்து விடல் ஆகாது.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதத்துக்கு எதிரான குற் றங்கள் ஆகியவற்றோடு எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக் கான நீதியைப் பெற்றுக்கொள்ள ஐ.நாப் பொறிமுறை மற்றும் மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகளில் மனந்தளராது தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டு காத்திருக்கும் எமது மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற எமது காத்திரமான தொடர் நடவடிக்கைகள் அவசியமாகும்.

மிகக் கடினமான தேர்தல் விட யங்களை கையாளும் பொழுதிலும் எமது இன நலன் சார்ந்த பிரதானமான ஐ.நா.மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் எமது மக்கள் சார்பாக அறிக்கைகள் இடம் பெறுவது தேர்தல் நலன்களையும் தாண்டி முக்கியமா னதாகும்.

ஆகவே அனைத்துத் தமிழ்த் தேசியப் பரப்பிலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் ஆகியோரை இந்த பேரவை கூட்டத் தொடருக்கான அறிக்கை சமர்ப்பிக்கும் எமது முயற் சியில் கைகோர்க்குமாறு விநயமாக வேண்டுகிறோம். - என்று உள்ளது.



# ‘சொபாதனவி’ மின்னுற்பத்தி நிலையத்தின் முதலாவது கட்டம் மக்களின் பாவனைக்கு!

கெரவலப்பிட்டி ‘சொபாதனவி’ மின்னுற்பத்தி நிலையத்தின் முதலாம் கட்டம் நேற்று மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

முதலாம் கட்டத்தின் கீழ் 220 மெகாவாட் மின்சாரம் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளது.

‘சொபாதனவி’ மின்னுற்பத்தி நிலையத்தின் மூலம் மொத்தமாக 350 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்கள் முதலாவது குழு நாட்டிற்கு வருகை தந்தது

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களின் முதலாவது குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

எதிர்வரும் சில வாரங்களுக்குள் மற்றுமொரு குழுவினர் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு குழுவும் நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து மேற்படி குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகளும் எதிர்வரும் சில வாரங்களுக்குள் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.






# தேர்தல் புறக்கணிப்பைப் பரிசீலனை செய்ய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிபந்தனை!

## சமஷ்டித் தீர்வை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கும்படி வலியுறுத்தி சஜித்துக்கு கஜேந்திரன் தெளிவூட்டல் கடிதம்

கடந்த 76 வருடங்களாக இலங்கையின் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டுவருவதன் மூலம் மட்டுமே அனைத்து இனங்களையும் அரவணைத்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உண்மையை தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுங்கள். உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்படி விடயங்கள் தெளிவாகவும் முழுமையாகவும் உள்ளடக்கப்படும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற நிலைப்பாட்டினை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக நாம் ஆராய முடியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியின் ஆதரவைக் கோரி சஜித் பிரேமதாஸ அனுப்பிய கடிதத்திற்கு 28 ஆகஸ்ட் 2024 அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த 2024.08.11 திகதியிட்டு எமது கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு நீங்கள் எழுதிய கடிதம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாடுகளைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளும் நோக்கில் இக்கடிதத்தினை எழுதுகின்றேன்.

கடந்த 2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் விளைவாக கடந்த 2022 இல் ஜனாதிபதி வெற்றிடம் ஏற்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களால் வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் நாடாளுமன்றினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன் போது நீங்கள் எமது ஆதரவினைக் கோரி எம்மை அழைத்து சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தீர்கள்.

அச்சந்திப்பின் போது, இலங்கையினை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் வகையில், ஒற்றையாட்சி அரசியல் யாப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசியல் யாப்பு கொண்டுவரப்படல் வேண்டியதன் அவசியத்தினை எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உறுதியாக வலியுறுத்தியிருந்தார். எனினும் அத்தகைய உறுதிப்பாடுகள் கிடைக்காத நிலையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பிலிருந்தும் நாம் விலகியிருந்தோம் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

எமது அரசியல் இயக்கத்தினைப் பொறுத்தவரை..

✦ ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிவிலான தீர்வும் தமிழ்மக்களது இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை.

✦ ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தம் தீர்வுமல்ல, தீர்வுக்கான தொடக்கப்புள்ளியுமல்ல.

✦ மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் (2016–2019) தயாரிக்கப்பட்ட இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு வரைவானது 'ஏக்கிய இராச்சிய' அடிப்படையிலானது என்பதனை சுட்டிக்காட்டுவதுடன் – அதனை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

கடந்த 76 வருடங்களாக இலங்கையின் அனைத்து மதங்களுக்கும், இனங்களுக்கும் சம அந்தஸ்தை வழங்க மறுத்து, தேசிய இனங்களுக்கிடையில் தீராப்பகையையும் வெறுப்பையும் தீவிரமாக்கி, தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போருக்கு வழிகோலியதுடன் போர் முடிவடைந்து 13 வருடங்களின் பின்னர் நாடு பொருளாதார வங்குரோத்து நிலை அடைவதற்கும் காரணமாக அமைந்தது தற்போதய ஒற்றையாட்சி அரசியல் யாப்பேயாகும்.

எனவே தோல்வியடைந்த அந்த ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படாதவரை சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிப்பதில்லை என்றும் – ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்களும் புறக்கணிக்க வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாட்டுடன், வடக்கு – கிழக்கு தமிழர் தேசத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

கடந்த 75 வருடங்களாக புரையோடிப் போயுள்ள சிறிலங்காவின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், அனைத்து இன, மத மக்களும் நிம்மதியாக, அச்சமின்றி வாழ்வதற்கும், புலம்பெயர் தமிழ்மக்கள் அச்சமின்றி முதலீடுகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களாக வாழக்கூடிய சமஷ்டு அடிப்படையிலான

தொடர்ச்சி▼

# தேர்தல் புறக்கணிப்பைப் பரிசீலனை செய்ய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிபந்தனை!

தொடர்ச்சி▲

தீர்வே ஒரே வழியாகும் என்பதே எமது கொள்கை நிலைப்பாடாகும்.

இதனடிப்படையில்..

- ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படல் வேண்டும்.
- இணைந்த வடக்கு – கிழக்கு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- மதசார்பற்றதாக இருத்தல் வேண்டும்.
- தமிழர் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- இவற்றின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு எட்டப்படல் வேண்டும்.

கடந்த 70 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக் குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோரி நிற்கும் தமிழ் மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னரும் தமிழர் தேசத்தின் மீது தீவிரமாக்கத் தொடரும் கட்டமைப்பு சார் இவழிப்பினைத் தடுக்க மேற்படி அங்கீகாரம் அவசியமானதெனக் கருதுகின்றார்கள்.

எனவே எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எமது ஆதரவினை தாங்கள் கோரியுள்ள நிலையில் – எமது ஆதரவு தேவைப்படும் ஜனாதிபதி வேட்பாளராகிய தாங்கள் – கடந்த 76 வருடங்களாக இலங்கையின் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பினை கொண்டுவருவதன் மூலம் மட்டுமே அனைத்து இனங்களையும் அரவணைத்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உண்மையை தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுவதன் மூலம், நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் தீர்வுகாண விழைகின்றீர்கள் என்ற உண்மை இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்படி விடயங்கள் தெளிவாகவும் முழுமையாகவும் உள்ளடக்கப்படும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற நிலைப்பாட்டினை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக நாம் ஆராய முடியும் என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். – என்று உள்ளது.



# எதிர்வரும் மூன்று நாள்களிலும் கடலுக்குச் செல்ல வேண்டாம்!

குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாகப் பலத்த காற்று மற்றும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், அடுத்த 3 நாள்களுக்கு வடக்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடலுக்கு செல்ல வேண்டாம் என கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்படையினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# தலதா அத்துகோறளைக்குப் பதில் கருணாரத்ன பரணவிதான நியமனம்

வெற்றிடமாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கருணாரத்ன பரணவிதானவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தலதா அத்துகோறளை, அண்மையில் தமது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். இதன் மூலம் வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே கருணாரத்ன பரணவிதான நியமிக்கப்பட்டுள்ளார்.



# வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு சர்வதேச வங்கிக் கணக்கு திட்டம்

பஹ்ரைனின் தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறை ஆணையம் தொழில் நிமித்தமாக பஹ்ரைன் விமான நிலையங்களுக்குள் நுழையும் அனைத்து வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும் சர்வதேச வங்கிக் கணக்கை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த திட்டம் இம்மாதம் முதல் அமுல் படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரியான பணப் பரிவர்த்தனைகளை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பஹ்ரைனின் தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறை ஆணையத்தின் றறற.டஅசய.பழஎ.டா என்ற இணையதளத்திற்குச் சென்று 00973-17506055 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் இது தொடர்பிலான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



மேலும் வெளிநாட்டுப் பணியாளர்கள் பஹ்ரைனுக்குள் நுழையும் போது, விமான நிலையத்தில் வைத்து இந்த சர்வதேச வங்கிக் கணக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் ஆலோசனைகளையும் அந்நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.



# கைவிலங்குகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் கைவிலங்குகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தற்போதுள்ள சில கைவிலங்குகள் செயலற்ற நிலையில் இருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்தக் கைவிலங்குகளைப் பயன்படுத்துவது ஆபத்தானது எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகக் கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவுன் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் காவல்துறை ஊடகப் பிரிவு தெரிவிக்கையில், அவ்வாறான தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பில் பொலிஸ் நிர்வாகப் பிரிவினரிடம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# இஞ்சியின் விலை அதிகரிப்பு



அண்மைக் காலமாக இஞ்சியின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலமாகப் பெய்த பலத்த மழைக் காரணமாகப் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 3,200 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விவசாயிகள் விதை இஞ்சியை விற்பனை செய்வதன் மூலம் விரைவாக இலாபம் ஈட்டுகின்றனர் எனவும், ஆனால் மருத்துவ குணம் கொண்ட இஞ்சி அல்லது உள்ளூர் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க கோருகின்றது யாழ். வணிகர் கழகம்!

தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி, மற்றும் சுயநிர்ணய கோரிக்கையை நிலைநிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளரான பா.அரியநேத்திரன் அவர்களை ஆதரித்து எமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி உலகமெல்லாம் ஒலிக்க சங்கு சின்னத்தில் வாக்களிப்பீர் என யாழ்ப்பாண வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசு இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக சித்தரித்து அதற்கான முழு வேலைத்திட்டத்தையும் சுதந்திரத்திற்கு பின் 1948 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்திக் கொண்டு வருகிறது. தமிழ் மக்கள் தங்கள் தாயகமான வடக்கு, கிழக்கைப் பாதுகாத்து உரிமையோடு வாழ்வதற்காக கடந்த 75 வருட கால நீண்ட எமது போராட்டம் இன்னும் வெற்றிபெறவில்லை. தமிழ் தலைமைகள் எமது உரிமையை நிலைநாட்டவும், சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கும் எடுத்த முயற்சிகள் அத்தனையும் இன்று வரை சிங்களத் தலைவர்களினால் நிராகரிக்கப்பட்டு உதாசீனப்பட்டுள்ளன. இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13 ஆம் அரசமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாமை, பேச்சுவார்த்தை என்ற ரீதியில் காலத்தை கடத்தி தட்டிக்கழித்து தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் ஐயா வரை ஏமாற்றியுள்ளார்கள்.

நாம் இந்த நாட்டின் பூர்வீக குடிகள். வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய தாயகம். நாம் தனித்துவமானவர்கள். எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. எமது நிலம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு போன்றன பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்கு தேவை என்பதை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தலை எதிர்கொண்டு அதற்கான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

இதன் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் நாம் இன்னும் எமது உரிமைப்போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அடையாளப் படுத்த முடியும். இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்களின் விடிவுக்காக ஜனநாயக முறையில் புதிய அணுகுமுறையாக இதை அணுகி எமது உரிமைகளை வென்றெடுக்க புத்தி சாதுரியமாக நடந்து இதனை அணுகுவதே சிறந்த தீர்மானமாக அமையும். இந்த முயற்சிக்கு வடக்கு, கிழக்கில் செயற்படும் தமிழ்தேசியம் சார்ந்த அனைத்துக்கட்சிகளும், வடக்கு, கிழக்கில் செயற்படும் அத்தனை பொது அமைப்புக்களும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் அத்தனை தமிழ் பேசும் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு தங்கள் பேராதரவை வழங்கி வாக்குகளை செலுத்த வேண்டும்.

அத்துடன் தென்னிலங்கை கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும், தென்னிலங்கை வேட்பாளர்களுக்கும், தென்னிலங்கை கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் வடக்கு, கிழக்கை சேர்ந்த கட்சிகளும், தென்னிலங்கை தலைவர்களுடன் தனிப்பட்ட நட்பு வைத்துள்ளோர்,மாற்றுக்கருத்துள்ளோர் தங்கள் நிலைப்பாட்டை மாற்றி தமிழ் இனத்தின் விடிவிற்காக தமிழ் மக்களின் ஜனநாயக முறைப்படி நடைபெறும் உரிமைக்கான அங்கீகாரத்திற்கு தங்கள் பேராதரவை வழங்க வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் பொது வேட்பாளரை நியமிக்காதுவிட்டால் தென்னிலங்கைத் தலைவர்கள் யோசிப்பார்கள். நாம் தமிழ் மக்களை எப்படி ஒதுக்கினாலும், புறக்கணித்தாலும், தமிழ் பகுதிகளை ஆக்கிரமித்தாலும் எமது கலாசாரம், பண்பாடுகளை சீரழித்தாலும், ஒடுக்குமுறைகளை பயன்படுத்தினாலும், தமிழர்கள் எங்களைத்தான் ஆதரிப்பார்கள் என்ற எண்ணத்தை மாற்ற வேண்டும்.

தமிழ் மக்கள் சார்பில் தமிழ் பொது வேட்பாளர் பின்வரும் செயற்பாடுகளை முன்னிறுத்தி போட்டியிடுவதே சிறந்தது என நாம் கருதுகின்றோம்.

1. கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் தம் பெரும்பான்மையை இழந்துள்ளனர். வடக்கு விரைவாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. தமிழர்களினுடைய பூர்வீகமும் வரலாறும் பாடப்புத்தக ரீதியாகவும், தொல்பொருள் ரீதியிலும் தொடர்ந்தும் மறைக்கப்பட்டு வருகின்றது. மேலும், இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழர்களுடைய பாரம்பரிய நிலங்களை சூறையாடுவது, வடக்கு கிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்கள், காணி அபகரிப்பு, கோயில்களை அழித்து புத்த பெருமானை பிரதிஷ்டை செய்வது, தமிழ் மக்களுக்கான வேலைவாய்ப்புக்களை புறக்கணிப்பது போன்றன தொடர்ந்தும் அன்றாட நிகழ்வாக நடைபெற்று வருகின்றன.

அத்துடன் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள மனித உரிமை மீறல்கள், அத்துமீறல்கள், பாரபட்ச நடைமுறைகள் போன்றவற்றை தடுத்து நிறுத்துவதற்கான சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய கண்காணிப்பாளர்களை வடக்கு, கிழக்கில் நிறுத்தி தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் சகல அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கண்காணிப்புக்களை மேற்கொள்ள சர்வதேசத்தை கோருவது.

2.காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி விசாரணை.

3.வடமாகாணத்தில் போதியளவு வளங்கள் இருந்தும் அதனை பொருளாதார ரீதியில் முன்னெடுத்து அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைக்காமை.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி தமிழ் தேசியத்தின் பால் பற்றுக்கொண்ட எல்லோரும் தமிழ் பொது வேட்பாளருக்கு எமது வாக்குகளை செலுத்தி, வடக்குக் கிழக்கில் எமது பெரும்பான்மையை நிரூபித்து, பெரும்பான்மை மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று இலங்கை, இந்தியா உட்பட சர்வதேசத்திற்கு எமது கோரிக்கைகளை இந்த தேர்தல் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரமுள்ள பூரண சுயாட்சியைப் பெறுவதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக கருதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளருக்கு ஒவ்வொரு தமிழ் மகனும் தங்கள் வாக்குகளைச் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வருவதால் இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது ஜனநாயக பண்பியல் முறையிலே எங்களுடைய உரிமைக்கான அங்கீகாரத்தை பெறுவதற்கும் சர்வதேசத்திற்கு அதனை முன்னிறுத்துவதற்கும் தமிழர் தரப்பில் இருக்கின்ற தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்ப்பொது வேட்பாளரான பா.அரியநேத்திரன் அவர்களினை ஆதரித்து, சங்கு சின்னத்திற்கு வாக்களித்து, தமிழ் மக்கள் தங்கள் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று அன்புடன் வேண்டிநிற்கின் றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற நோக்கமில்லாவிடினும், வடக்கு கிழக்கில் அதிகூடிய வாக்குகளை பெற்று தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி மற்றும் சுயநிர்ணயக்கோரிக்கையை நிலைநிறுத்தி உலகமெல்லாம் ஒலிக்க வாக்களிப்பீர் - என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.08.2024




இன்று உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதற்கும் உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும் தேவையான உறுதி மற்றும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். வங்கியிருப்பை சிறப்பாக பராமரித்து திருப்தி அடைவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.




இன்று மந்தமான நிலை காணப்படும். உங்கள் செயல்களில் விழிப்புணர்வு தேவை. இன்று நன்மை காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளை கையாளும்போது சவால்களை சந்திக்க நேரும்.

மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். தேவையற்ற வாக்குவாதங்கள் எழ வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.




உங்களுக்கு கவலை அளிக்கும் வகையிலான சூழ்நிலைகள் இன்று காணப்படும். உணர்ச்சிக் கட்டுப்பாட்டை பராமரித்தலும் சமநிலையோடு இருத்தலும் நல்ல பலனளிக்கும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு சென்று ஓய்வெடுங்கள்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியில் சிறப்பான பலன்களைப் பெற சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும்.

உங்களிடம் பதற்றமான மனநிலை காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு காணப்படும். உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்த நீங்கள் இந்த உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் காணப்படும். இதனால் உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலும். கவனம் மற்றும் உறுதியுடன் செயல்பட்டால் உங்கள் வளர்ச்சி மேம்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நீங்கள் தன்னிச்சையாகவும் திறமையுடனும் செயலாற்றுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியோடு உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சேமிப்பு அதிகரிக்கும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மன வலிமை காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சாதகமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மையுடன் ஆற்றுவீர்கள். இதனால் உங்கள் திறமை மேம்படும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக நல்லிணக்கம் மேம்படும்.

பூர்வீகச் சொத்து மூலமாக இன்று பண வரவு காணப்படுகின்றது. கடன் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது. கையிலுள்ள பணத்தை கொண்டு அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதில் நம்பிக்கை உணர்வு காணப்படும்.




இன்று எல்லா செயல்களிலும் யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்கள் இலக்குகளை முடிப்பதில் சில கடினங்கள் காணப்படும். மனதை அமைதியாக வைத்து கவனமுடன் செயற்பட்டால் நன்மை விளையும்.

நிலுவையில் உள்ள பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்குமுறைபடுத்தி செயலாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் ஏற்படும் சஞ்சலமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் நல்லிணக்கம் குறையும். நல்லுறவை பராமரிக்க உணர்ச்சிகளை கட்டுபடுத்தி நட்புடன் உணர்வுகளைப் பகிர வேண்டும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்க சாதகமான நாள் அல்ல. என்றாலும் உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்தும் புதிய திறமைகளை கற்கலாம். நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்கு புறம்பாக நடக்கலாம் என்பதால் அவர்களிடம் கவனமாக இருக்கவும்.

பணிகள் சலிப்பைத் தருவதாக இருக்கும். இது உங்களுக்கு சோர்வை அளிக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். அமைதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களிடம் மகிழ்ச்சியான எண்ணங்களும் செயல்களும் காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதி காணலாம்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். நீங்கள் உங்கள் பணிகளை இனிமையான சூழ்நிலையில் மகிழ்ச்சியாக செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரும் ஒருவரையொருவர்நன்கு புரிந்து கொள்ள இயலும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் நிதியை வளமாக்க இன்று நீங்கள் சேமிக்கும் திட்டங்களில் பங்கு கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மனதைரியம் காரணமாக இது சாத்தியமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.08.2024

## தனுசு

இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டியிருக்கும். இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது.

அதிகப் பணிகள் காரணமாக கவலை ஏற்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நகைச்சுவை பேச்சின் மூலம் நீங்கள் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உருவாக்க இயலும். உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் அனுசரணை காணப்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று அதிக செலவுகள் காணப்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.

## கும்பம்

இன்று எல்லா செயல்களிலும் பொறுமை கடைபிடிக்க வேண்டும். இன்று வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளதால் பிறருடன் பேசும் போது கவனம் தேவை. முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது நீங்கள் மிகவும் பொறுமை காக்க வேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் நட்போடு அணுகுவதன் மூலம் உங்கள் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக இன்று பண இழப்பு காணப்படுகின்றது.

## மகரம்

இன்று மந்தமான நாளாக இருக்கும். கையாள்வதற்கு கடினமான கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும்.இதனை சமாளித்து உறுதியுடன் அடுத்த கட்டத்திற்கு நீங்கள் செல்ல உறுதி செய்து கொள்ளுங்கள்.

சரியான நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் காணப்படும். இதனால் பணிகள் நிலுவையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் இணைந்து நேரம் செலவழிப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரும் ஒன்றாக பொழுதுபோக்கு நிகழ்சிகளில் கலந்துகொள்வது சிறந்தது.

பணத்தை கையாளும்போது அஜாக்கிரதையாக மற்றும் கவனக் குறைவாக இருந்தால் இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

## மீனம்

இன்று நீங்கள் தன்னிச்சையாகவும் நம்பிக்கையுடனும் செயல்படுவீர்கள். இதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு கிடைக்கும் புதிய வாய்ப்புகளில் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் இன்று சாத்தியம். இன்று நீங்கள் பணிகளை விரைவாகவும் திறமையாகவும் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நெருக்கம் அதிகரிக்கும். இது திருப்தி அளிக்கும். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

நிதிநிலைமை சிறப்பாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





